**வாக்குமூலம்**
**தலைமை குற்றவியல் நடுவர் நீதிமன்றம், தென்காசி.**
**வழக்கு எண் : SC.No. 90/2017**
**வழக்கு சாட்சி PW–12**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | பிரதாபன் | ஜாதி | : | |
| தந்தை பெயர் | : | | தொழில் | : | |
| கிராமம் | : | | சமயம் | : | |
| தாலுகா | : | | வயது | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of April 15th , 2025.

**(எதிரிகள் ஆஜர். எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.)**

**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை :**

சம்பவயிடத்திற்கும், செங்கோட்டை அரசு மருத்துவமனைக்கும் இடையே மெயின் ரோட்டு வழியே வந்தால் 5 கி.மீ தொலைவு இருக்கும். குறுக்கு வழியாக வந்தால் 4 கி.மீ தொலைவு இருக்கும் என்றால் இருக்கலாம். எதிரிகளும், இந்த வழக்கின் சாட்சிகளும் வேறு வேறு சமூகத்தை சார்ந்தவர்கள் என்றால் சரிதான். காயம்பட்ட நபருடன் அவரது தகப்பனார் அ.சா.1 மருத்துவமனைக்கு உடன் சென்றாரா? என்றால் உடன் சென்றார். காயம்பட்டவருக்கு சிகிச்சை அளித்த மருத்துவர் திருமதி.கெங்காதேவி அவருடைய வாக்குமூலத்தில் காயம்பட்ட நபரை அவரது அண்ணன் அழைத்து வந்ததாக குறிப்பிட்டுள்ளாரா? என்றால் சகோதரர் அழைத்து வந்ததாகத் தான் குறிப்பிட்டுள்ளார். காயம்பட்டவரின் சகோதரர் தான் சம்பவத்தை பற்றி மருத்துவரிடம் விபரம் கூறினார் என்றால் அந்த விபரம் ஆவணங்களில் துலங்கவில்லை. மருத்துவரிடம் காயம்பட்டவர் அரிவாளால் தாக்கப்பட்டதாகத் தான் அவரது அண்ணன்

கூறியதாக மருத்துவர் வாக்குமூலத்தில் குறிப்பிட்டுள்ளார் என்றால் சரிதான். மருத்துவரின் வாக்குமூலத்தில் வலது கை மணிக்கட்டில் அ.சா.2 க்கு காயம் ஏற்பட்டதாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். மருத்துவரின் வாக்குமூலத்தில் அ.சா.2 க்கு உள்ளங்கையில் காயம் இருந்ததாக துலங்காது என்றால் சரிதான். காயம்பட்ட நபருக்கும், எதிரிகளுக்கும் முன்விரோதம் இருந்ததாக புகாரிலும், வாக்குமூலங்களிலும் துலங்காது என்றால் சரிதான். அத்தாட்சியில் கைப்பற்றப்பட்ட வாளில் இரத்தக்கறை இருந்ததாக துலங்காது என்றால் சரிதான். அ.சா.1 மற்றும் அ.சா.2 ன் வாக்குமூலங்களில் காயம்பட்டவரை கொலை செய்ய வேண்டும் என்ற உள்நோக்கம் இருந்ததாக துலங்காது என்றால் சரியல்ல. சம்பவயிடத்தின் அருகே நிறைய வீடுகள் இருப்பதாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். சம்பவயிடத்தின் அருகே ராணி, விஷ்ணு, ஜெயபால், குருவம்மாள், தீபா, மாடசாமி, சின்னத்தாய், குமரேசன் மற்றும் குமரேசன் முடிதிருத்தகம் இருந்ததாக பார்வை மகஜரில் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். அவர்களில் ஒருவரை கூட இந்த வழக்கில் சாட்சியாக சேர்க்கவில்லை என்றால் ஜெயபால் என்பவரை சாட்சியாக சேர்த்துள்ளேன். அ.சா.2 ஐ மருத்துவமனையில் சேர்த்த அவரது சகோதரரை நான் விசாரிக்கவில்லை என்றால் சரிதான். விபத்து பதிவேட்டில் சம்பவம் இரவு 08.00 மணிக்கு நடைபெற்றதாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். அ.சா.1 கொடுத்த புகாரில் சம்பவம் இரவு 08.45 மணிக்கு நடந்ததாக குறிப்பிட்டுள்ளார் என்றால் சரிதான். சம்பவம் வல்லம் தெருவில் எந்த இடத்தில் நடைபெற்றது என்று குறிப்பிட்டு விபத்து பதிவேடு மற்றும் மருத்துவரின் வாக்குமூலத்தில் குறிப்பிடபடவில்லை என்றால் சரிதான். இரவு நடைபெற்ற சம்பவத்திற்கு

சுமார் 15.30 மணிநேரம் காலதாமதமாக புகார் கொடுக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். காலதாமதத்திற்கான காரணம் முதல் தகவல் அறிக்கையில் குறிப்பிட்டு கூறவில்லை என்றால் சரிதான். திரவியம் மருத்துவமனையில், மருத்துவரிடம் கொடுத்த தகவலிலும் வல்லத்திற்கு அருகே சம்பவம் நடைபெற்றதாகத் தான் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். பார்வை மகஜரில் 12.10.2015ம் தேதி, 08.00 மணிக்கு பார்வையிட்டதாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். அது ஒரு Clerical Mistake. இந்த சம்பவம் குறித்து காவல்நிலையத்திற்கு தகவல் கிடைத்த நேரம் 12.10.2015ம் தேதி, மதியம் 12.00 மணி ஆகும். பார்வை மகஜரில் குறிப்பிட்டுள்ள 08.00 மணி இரவா, பகலா என்று நான் குறிப்பிட்டு கூறவில்லை என்றால் சரிதான். வழக்கு ஆவணங்களில் இரயில்வே நேரம் குறிப்பிட்டு தான் பதிவுகள் மேற்கொள்ளப்படும் என்றால் சரிதான். நான் பார்வைமகஜரில் குறிப்பிட்டுள்ள 08.00 மணி என்பது இரயில்வே நேரப்படி காலை 08.00 மணியைத் தான் குறிக்கும் என்றால் சரியல்ல. அது Clerical Mistake-ஆல் அவ்வாறு எழுதப்பட்டது. பார்வை மகஜர் சாட்சிகளான ஜேம்ஸ் மற்றும் ஜோசப் அவர்களது வாக்குமூலத்தில் மதியம் 01.00 மணிக்கு சம்பவயிடத்தை போலீசார் பார்வையிட்டதாக குறிப்பிட்டுள்ளார்கள் என்றால் சரிதான். காயம்பட்ட நபருக்கு முதுகில் காயம் இருந்ததாக நான் மருத்துவரை விசாரித்து வாக்குமூலம் பெறவில்லை என்றால் அவருக்கு அவ்வாறு முதுகில் காயம் இல்லை என்பதினால் அது சம்பந்தமாக நான் மருத்துவரை விசாரிக்கவில்லை. அ.சா.1 புகாரிலோ, 161(3) வாக்குமூலத்திலோ தனது மகன் காயம்பட்டதாக ஆதிநாராயணனோ அல்லது இராஜசேகரனோ தனக்கு தொலைபேசி மூலம் தகவல் கொடுத்ததாக குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். இந்த

வழக்கில் அரசு அதிகாரிகளைத் தவிர மீதமுள்ள சாட்சிகள் காயம்பட்ட நபரின் சமூகத்தை சேர்ந்தவர்கள் என்றால் அது பற்றி நான் விசாரிக்கவில்லை. எதிரிகள் தாழ்த்தப்பட்ட சமுதாயத்தை சேர்ந்தவர்கள் என்றால் சரிதான். வழக்குகள் பதிவு செய்து, விசாரணை மேற்கொள்ளும் போது காயம்பட்டவர் மற்றும் எதிரிகள் எந்த சமூகத்தை சேர்ந்தவர்கள் என்று விசாரிப்பது வழக்கம் என்றால் சரிதான். அ.சா.1 ன் புகார் மனுவிலோ அல்லது அ.சா.1 மற்றும் அ.சா.2 ன் வாக்குமூலத்திலோ எதிரிகள் ஏசியதால், அ.சா.2 ற்கோ அல்லது மற்ற நபர்களுக்கோ அவமானம் ஏற்பட்டதாக குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான். அ.சா.1 கொடுத்த புகார் மனுவில் அவரது கையெழுத்து முதலில் தமிழில் போடப்பட்டு, பிறகு அடிக்கப்பட்டு ஆங்கிலத்தில் போடப்பட்டுள்ளது என்றால் சரிதான். நாங்கள் அவ்வாறு அடித்தல், திருத்தல் செய்து கையெழுத்து வாங்கவில்லை. அவ்வாறு, கையெழுத்து அடித்து பிறகு போடப்பட்டது சம்பந்தமாக அ.சா.1 டம் நான் வாக்குமூலம் வாங்கவில்லை. அ.சா.2 ஐ அவரது தகப்பனார் திரவியம் மருத்துவமனையில் சேர்த்ததாக துலங்காது என்றால் சரிதான். சத்யராஜ் என்பவர் சேர்த்ததாக உள்ளது. நான் சத்யராஜை விசாரித்து வாக்குமூலம் எதுவும் பதிவு செய்யவில்லை. நான் சொன்ன நாள், நேரத்தில் எதிரிகள் காயம்பட்ட நபரை தாக்கவில்லை என்றால் சரியல்ல. அ.சா.1, அ.சா.2 ம் எதிரிகளும் வெவ்வேறு சமூகத்தை சார்ந்தவர்கள் என்பதினால், அ.சா.2 க்கு வேண்டாத நபர்களால் வேறு வகையில் ஏற்பட்ட காயத்தை வைத்து, சமுதாய தூண்டுதலின் பேரில் எதிரிகள் மீது பொய் புகார் கொடுத்து, அதன் அடிப்படையில் நான் சாட்சிகளை சரிவர விசாரணை செய்யாமல், ஒருதலைபட்சமாக விசாரித்து எதிரிகள் மீது தவறுதலாக குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. நான்

சொன்ன நாள், நேரத்தில் எதிரிகளை கைது செய்யவில்லை என்றாலும், அவர்களிடமிருந்து எந்த ஒப்புதல் வாக்குமூலமும் பெறவில்லை என்றாலும், அதன் அடிப்படையில் அத்தாட்சியில் எந்த பொருளும் கைப்பற்றவில்லை என்றால் சரியல்ல. இந்த வழக்கில் தாக்கல் செய்யப்பட்டுள்ள சான்று பொருட்களுக்கும், எதிரிகளுக்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்றால் சரியல்ல. நான் சொன்ன நாள், நேரத்தில் சம்பவயிடம் சென்று பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்யவில்லை என்றால் சரியல்ல. இந்த வழக்கின் ஆவணங்கள் மற்றும் சான்று பொருட்கள் அனைத்தும், இந்த வழக்கிற்காக பின் யோசனையிட்டு காவல் நிலையத்தில் வைத்து தயார் செய்யப்பட்டது என்றால் சரியல்ல. எதிரிகளுக்கும், இந்த வழக்கு சம்பவத்திற்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்றால் சரியல்ல.

<u>**மறுவிசாரணை**</u> –

இல்லை.

C KATHIRAVAN

Digitally signed by C KATHIRAVAN
Date: 2025.04.16 13:09:31 +0530